

காஞ்சிபுரம் மாநகராட்சியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டு நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். உடன் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.

### சென்னை வேளச்சேரியில்

# மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

சென்னை, டிச. 7 -

மிக்ஜாம் புயல் காரணமாக, சென்னை வேளச்சேரியில், கனமழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டப் பகுதிகளை ஆய்வு செய்து, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிவாரணப்பொருள்கள் வழங்கினார்கள்

மிக்ஜாம் புயல் காரணமாக,கடந்த இரண்டு நாட்களாக கனமழை வெள்ளத்தினால், சென்னை முழுவதும் தத்தளித்து வந்த நிலையில், மிகவும் தாழ்வானப் பகுதிகளில் ஒன்றான வேளச்சேரி மற்றும் மடிப்பாக்கம் பகுதி முழுவதும், வெள்ளநீர் சூழ்ந்து பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மிக்ஜாம் புயல் ஆந்திரா மாநிலத்தை நோக்கி நகர்ந்து சென்ற நிலையில், கனமழை படிப்படியாக குறையத் தொடங்கிது.

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 5.12.2023 அன்று அதிகாலையிலேயே பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளச்சேரி செக்போஸ்ட் பகுதிக்குச் சென்றடைந்தார். 5 பர்லாங் சந்திப்பு பகுதியில், ஏ.ஆர். Fuels என்ற எரிபொருள் நிரப்பும் நிலையத்தில், கடும் மழைவெள்ளத்தின் காரணமாக அலுவலகம் மற்றும் எரிபொருள் கன்டெய்னர் புதைப்பட்டு விட்டது. கண்டெய்னரையும் அதில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த இரண்டு பணியாளர்களையும் மீட்க, மோட்டார் வாகனங்கள் மற்றும் இழுவை இயந்திரங்கள் ஆகியவற்றை உடனடியாக வரவழைத்து மீட்புப் பணிகளை முடுக்கி விட்டார்.

தொடர்ந்து, வேளச்சேரி மற்றும் விஜய நகர் பகுதியில் தேங்கியுள்ள, வெள்ளநீரை அகற்றவும், அதில் பாதிக்கப்பட்டுள்ள மக்களையும் மீட்கவும், மீனவர்களிடமிருந்து படகுகளை எடுத்துவர அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, படகுகளை உடனடியாக வரவழைத்து, வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்க நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

AGS காலனி, சொக்கலிங்கம் தெரு, ராம் நகர் போன்ற பகுதிகளில், உணவு, பால் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல், மக்கள் அவதியுற்றனர். அமைச்சர் அவர்கள் உடனடியாக, ஆவின் நிறுவனத்தை தொடர்பு கொண்டு, 11 ஆயிரம் பால் பாக்கெட்களை வரவழைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தார்.

மேலும், வெள்ளநீர் சூழ்ந்து, பொது மக்கள் வெளியில் வர இயலாத இடங்களில், ஜே.சி.பி. இயந்திரத்தில், பால் பாக்கெட்டுகளை அடுக்கிக் கொண்டு சென்று, அமைச்சர் அவர்களே பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து பால் பாக்கெட்களை வழங்கினார்கள்.

சுமார் 5000 உணவு பொட்டலங்களை வரவழைத்து, உணவின்றி, தவித்த மக்களுக்கு வழங்கினார்.

மழை வெள்ளத்தினால், பாதிக்கப்படாத திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, வேலூர், இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து, நிவாரணப் பொருட்களை கொண்டுவர உத்தரவிட்டு, இந்த நிவாரணப் பொருட்கள் வந்தவுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

வேளச்சேரி இரயில்வே ஜங்ஷன் பகுதியில், பால் பாக்கெட்டுகளை பொது மக்களுக்கு வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்திர மோகன் வேளச்சேரி பகுதிப் பொறுப்பாளர் திருமதி. வி.ஆர்.சுப்புலெட்சுமி நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சிறப்பு அலுவலர் இரா. விஸ்வநாத் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 67வது நினைவு நாளை முன்னிட்டு

# சட்டமேதை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் சிலைக்கு மாலை!

## மாவட்டப் பிரதிநிதி பி.எஸ்.சைலஸ் தலைமையில்!

சென்னை, டிச. 7 -

சட்டமேதைஅண்ணல் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் 67வது நினைவு நாளை முன்னிட்டு, மாவட்டப் பிரதிநிதி பி.எஸ்.சைலஸ் தலைமையில்,கழகத்தினர் திருவொற்றியூர் டோல்கேட் அருகில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து உறுதிமொழி முழக்கங்கள் எழுப்பினர்.

இதில் மாவட்டப் பிரதிநிதி ஜே.பி.சந்தான கிருஷ்ணன், சென்னை வடகிழக்கு மாவட்ட கலைஇலக்கியபகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் கு.தமிழ்மணி, இலக்கிய அணிமாவட்டத்தலைவர் கவிஞர் த.மகிழன், தொழிற்சங்கத்தலைவர் ஆதித்தமிழன், இரா. கணேசன், சோட்டு ஜோ. ராஜ்குமார், பா.சரவண குமார், ஏ.பி.நாகராஜ், காங்கிரஸ் பிரமுகர்கள் பி.விமல்தாஸ்,வாழப்பாடி செந்தில், திராவிடர் கழக இளைஞர் அணி கவிதை சதீஷ், அரவிந்தன், வாசுதேவன், விடுதலைச் சிறுத்தைகள் நகர செயலாளர் உலக முதல்வன்,பகுத்தறிவாளர் கழக மாவட்ட தலைவர் ஆசைத்தம்பி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### சென்னை மாவட்டத்தில்

# பள்ளிகள் - கல்லூரிகளுக்கு இன்றும் விடுமுறை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச. 7 -

'மிக்ஜாம்' புயல் காரணமாக ஏற்பட்ட கனமழையால் சென்னை, மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு 4.12.2023 முதல் 6.12.2023 வரை தமிழ்நாடு அரசு விடுமுறை அறிவித்திருந்தது.

புயல் வெள்ளம் பாதித்த சில பகுதிகளில் நிவாரணப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மாணவர்கள் நலன் கருதி, இன்று (7.12.2023) சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு தமிழ்நாடு அரசு விடுமுறை அறிவித்து செய்தி வெளியிட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சித்தமல்லி ந.சோமசுந்தரம்

### டிசம்பர் 7 (2022)



இளமைப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் இணைந்து பணியாற்றி, கழகம் துவங்கியவுடன், அதில் தன்னை இணைத்துக் கொண்டு சித்தமல்லி கிளைக் கழக அமைப்பை முதன்முதலாக உருவாக்கி, அதன் செயலாளராக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கிளைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட அவைத்தலைவர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

1967, 1971 ஆகிய இரு முறை கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். பல்வேறு கூட்டுறவு சங்கம் மற்றும் அறங்காவலர் குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

### ஈரோடு பெருந்துறையில்

# கல்வி சாரண - சாரணியர்களுக்கான பயிற்சி!

## அமைச்சர் சி.வி.கணேசன் சிறப்புரை!

ஈரோடு, டிச. 7 -

தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கம் சார்பில் ஈரோடு மாவட்டம் பெருந்துறை சேர்ந்த கல்வி சாரண சாரணியர்களுக்கான ஆண்டு பயிற்சி மற்றும் திருத்திய சோபன் பயிற்சி முகாம் சென்னிமலை அருகில் உள்ள தனியார் கல்லூரியில் ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சம்பத் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில், தமிழக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் கலந்து கொண்டு தமிழகத்தில் பல்வேறு துறைகள் இருந்தாலும், கல்வி மற்றும் மருத்துவத்துறையை தன் இரண்டு கண்களாக பார்ப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அந்த வகையில் தான், அரசுப் பள்ளிகளில் காலை உணவு வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

இந்திய அளவில் உற்பத்தி செய்யும் தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களில், 43 சதவீதம் பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என மத்திய அரசு குறிப்பிட்டுள்ளதற்கு முக்கிய காரணம் தமிழக அரசு, மகளிருக்கு இலவச பேருந்து, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குவது போன்ற திட்டங்களை செயல்படுத்தி இருப்பது தான் என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து சாரண - சாரணியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிய அமைச்சர் சி.வி. கணேசன், முகாமில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளையும் கண்டு ரசித்தார்.

நிகழ்வில் தனியார் கல்லூரியின் தலைவர் மக்கள் ராஜன், மாவட்ட இடைநிலை கல்வி அலுவலர் பெல்ராஜ், சென்னிமலை ஒன்றிய கழகச் செயலாளர் செங்கோட்டையன் குமாரவலசு ஊராட்சிமன்ற தலைவர் இளங்கோ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி. வாசு

### டிசம்பர் 7 (2014)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதியில் வட்டக் கழகப் பொறுப்பாளர், மாவட்டப் பிரதிநிதி, பகுதி துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

சென்னை துறைமுக அறக்கட்டளை உறுப்பினராகவும், தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

9 ஆம் ஆண்டு நினைவேந்தல் 07-12-2023

முன்னாள் பகுதி துணைச் செயலாளர்

# சி.வாசு



ஊருக்காக உழைத்த உத்தமரே
உந்தன் நினைவுகளே எங்கள் சொத்து
நிலைத்த புகழுடன் நீங்கள்
நீங்காத எண்ணங்களுடன் நாங்கள் என்றும்

# தலைவர் தளபதி

வழியில்

வா.சாந்தி, வா.பிரபு, வா.துரை,
வா.அருண், சி.சந்திரன்